# கலைஞரும் நானும்

101

'அரசியல் மாமேதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அலுவலகத்தில் பணியாற்றக் கிடைத்த அரிய வாய்ப்பில், பொன்னான பல அனுபவங்கள் உள்ளன' எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் கலைஞரின் சிறப்பு உதவியாளர் முத்து வாவாசி.

# "தினம் தினம் தலைவர்!"

**புலவர் முத்து வாவாசி, சிறப்பு உதவியாளர்**



தொலைதூரத்தில் இருந்து பார்த்து வியந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர். திராவிட இனத்தின் தலைவராக அவர் ஆட்சி அமைத்திருந்த 1973 காலகட்டத்தில்தான், ஒரு பைசா செலவில்லாமல், பரிந்துரை இல்லாமல் எனக்கு அரசு வேலை கிடைத்தது. கும்பகோணத்தில் படித்த எனக்கு, சென்னை, திருவொற்றியூர் அரசுப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை கிடைத்தது. ஆனால், தலைவரை நேரில் பார்ப்போம், அவருக்கான பணிகள் செய்வோம் என்றெல்லாம் அப்போது நினைத்துப் பார்த்ததேயில்லை. அப்படியான அனுபவம் அமைந்தது 1982-ஆம் ஆண்டு வாக்கில்தான்.

திருச்செந்தூர் கோயில் தக்கார் படுகொலை தொடர்பான 'பால் கமிஷன்' அறிக்கையை கலைஞருக்குக் கொடுத்தவர் என எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் கைது செய்யப்பட்டவர் பொன். சதாசிவம். தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புத்துறை அலுவலராக இருந்தார். எனது நலம் விரும்பி. அவர்தான் 'தலைவரிடம் வாழ்த்து வாங்கலாம்' எனப் புத்தாண்டு தினத்தில் என்னை அழைத்துச் சென்றார். அப்போதுதான் முதன்முதலில் தலைவரை நேரில் பார்த்து ஆனந்தம் கொண்டேன். அந்தக் காலகட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையில் பதிப்பாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அங்கு 'அறிவொளி இயக்க'த்தின் துணைத் தலைவராக இருந்த ஏ.எம்.இராமன் ஐ.ஏ.எஸ் அவர்களின் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்தேன். 1996-ஆம் ஆண்டில் அவர் கலைஞரின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டபோது, "நீங்க வந்தீர்கள் என்றால், தலைவருக்கு உதவியாக இருப்பீர்கள்" என்று என்னை அழைத்துக் கொண்டார்.

அன்று முதல், ஒவ்வொரு நாளும் தலைவரைப் பார்ப்பது, அவர் கேட்கும் தகவல்கள், குறிப்புகளை அண்ணன் சண்முகநாதன் வழி அனுப்புவது என எனது பணி இருக்கும். பல நேரங்களில் நான் தயார் செய்து அனுப்புவது சிறப்பாக இருக்கிறது என தலைவர் பாராட்டியதாக அண்ணன் சண்முகநாதன் கூறுவார். பின்புலமாக இருந்து செய்த பணிகள்தான். ஆனால், சந்திக்கும்போதெல்லாம், "எப்படிய்யா இருக்க?" என நலம் விசாரிக்கத் தவற மாட்டார்.

## மாறிய செய்திக் குறிப்பு

2000-வது ஆண்டு என்று நினைக்கிறேன். ஒருநாள் தலைவரின் பத்திரிகைச் செய்தியை அனுப்ப வேண்டிய பணி. சமூக நலத்துறை தொடர்பான ஒரு அறிக்கை, நான் தயாரித்து அனுப்பியது தலைவரின் ஒப்புதலுடன் மாலைப் பத்திரிகைகளில் வந்துவிட்டது. அதே அறிக்கையை மறுநாள் செய்திக்குத் தயாரித்து, அனுப்புகையில் வேறு சில புள்ளி விவரங்களோடு தலைவரின் ஒப்புதலுக்குச் சென்றுள்ளது. இது தொடர்பாக தலைவர் கேட்க, அண்ணன் சண்முகநாதன் என்னை அழைத்து, புள்ளிவிவரத்துக்கு ஆதாரமாக இருந்த செய்தி, நான் தயாரித்து அனுப்பிய செய்தி ஆகியவற்றுடன் தலைவர் அழைக்கிறார் எனக் கூறினார்.

அடுத்த நாள் காலை தலைவர் அவரது அறையில் வைத்து விசாரிக்கிறார். "சமூக நலத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்கள் அடிப்படையில் தயாரித்தேன்" என விளக்கம் கொடுத்தேன். "அப்படியென்றால் காலையில் ஒரு செய்தியும், மாலையில் ஒரு செய்தியும் எப்படி மாறியது?" எனக் கேட்டார். உடனே, அருகில் இருந்த சமூகநலத்துறை அமைச்சர் சற்குணபாண்டியன் அவர்கள், "அண்ணே நான்தான் மாற்றினேன். நாம நிறைய செஞ்சிருக்கோம். ஆனால், விவரங்கள் குறைவாக இருந்ததால், அடுத்த நாள் வரும் செய்தியில் மாற்றிக்கங்க என அதிகாரிகளிடம் கூறியிருந்தேன்" என்றார். அவர் பெயரில் வெளிவரும் தகவல்களில் பிழையோ, விவரங்கள் மாறி இருந்தாலோ இப்படியான கிடுக்குப்பிடி கேள்விகள் இருக்கும். அதையெல்லாம் நுணுக்கமாகக் கவனித்தவர் தலைவர்.



## மக்கள் தொடர்பு அலுவலர்

1996-2001 ஆட்சிக் காலகட்டத்தில் முதலமைச்சரின் மக்கள் தொடர்பு அலுவலராக இருந்தேன். செய்தித் தொடர்புத்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, ஆட்சிமாற்றத்துக்குப்பின், மீண்டும் கல்வித்துறைப் பணிக்கே அனுப்பினர். மீண்டும் 2006-ஆம் ஆண்டில் நமது ஆட்சி அமைந்ததும், சண்முகநாதன் மற்றும் ராஜமாணிக்கம் இருவரும் என்னை அழைத்துக் கொண்டனர்.. தலைவர் ஆட்சியில் இல்லை என்றாலும், நான் அரசுப் பணியில் இருந்தபோது, விடுமுறை நாட்களில் கோபாலபுரம் வந்து விடுவேன். அப்படியான நேரங்களில் குறிப்புகள் கொடுப்பது, தகவல்கள் திரட்டுவது என தலைவருக்கான பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வேன்.

> **தலைவருக்காகச் செய்ய வேண்டிய வாழ்நாள் கடமையை அந்த நூல் வழியாகச் செய்திருக்கிறேன் என்பதே என் நிம்மதி.**

'விடுதலை' ஏட்டின் பொன்விழா நிகழ்ச்சி சேலத்தில் நடைபெற்றபோது, காணொலி வழியாகக் கலந்து கொண்டார் தலைவர். அவர் பேசுவதற்கான குறிப்புகளை எடுத்து அளித்திருந்தேன். அதற்காக தலைவர், "வாவாசி நன்றாகத் தயாரித்துக் கொடுத்துள்ளார், பழைய சம்பவங்களையெல்லாம் திரட்டிக் கொடுத்துள்ளார்" எனப் பாராட்டியுள்ளார்.

## தலைவரிடம் வாழ்த்து

எனது மகன் திருமணம் கும்பகோணம் அருகே சுவாமிமலையில், குன்றக்குடி அடிகளார் தலைமையில் சீர்திருத்தத் திருமணமாக நடைபெற்றது. திருமணத்துக்குத் தலைவருக்கு அழைப்பு விடுக்க, நானும் எனது துணைவியாரும் சென்றிருந்தோம். நலம் விசாரித்தவர், "திருமணத்துக்கு வர வாய்ப்பில்லை. சென்னையில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்துவிடுகிறேன்" என்று கூறினார். ஆனால், வரவேற்பு அன்று முக்கியமான வழக்கு காரணமாக, தலைவர் வர முடியாத நிலை. காலை அறிவாலயத்தில் தலைவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அண்ணன் சண்முகநாதன், அண்ணன் ராஜமாணிக்கம் ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில், "தலைவருக்கு இன்று உடம்புக்கு முடியவில்லை, அதனால் வருவது சந்தேகம்தான்"என்று சண்முகநாதன் கூறினார். "அண்ணே, தலைவர் வரவில்லை என்றால் என்ன? பிள்ளைகளை நான் இங்கு அழைத்து வந்து தலைவரிடம் வாழ்த்து வாங்க வைக்கிறேன்" எனக்கூறி அப்படியே அழைத்து வந்தேன். மாலை நேரத்தில் தலைவருடன் பேராசிரியரும் இணைந்து வாழ்த்தினர்.

## கலைஞர் செதுக்கிய தமிழகம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு அளித்த அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக, 'கலைஞர் செதுக்கிய தமிழகம்' என்கிற நூலை எழுதியிருந்தேன். அதை அச்சுக்குக் கொண்டு செல்லும் முன்னர் தலைவர் அவர்களிடத்தில் முதல் பிரதியைக் கொடுத்திருந்தேன். தலைவர் அவர்கள் எப்போதும்போல ஏறிட்டுப்பார்த்து, புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டு அனுப்பினார். பின்னர் அண்ணன் சண்முகநாதன் அவர்கள், 'எனது நூல் மிகச் சிறப்பாக வந்துள்ளது' என கலைஞர் பாராட்டியதாகவும், அந்த நூலை யார் பதிப்பிக்க உள்ளனர் எனக் கேட்டதுடன், தலைமைக் கழகத்தின் வழி கொண்டு வரலாம் என தலைவர் கூறியதாகவும் குறிப்பிட்டார். ஆனால், கெடுவாய்ப்பாக அதன்பின்னர் தலைவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

அதன்பின்னர், "எனது நூலை தலைமைக் கழகத்தின் வழி போடலாம்" என்று தலைவர் சொன்ன தகவலை, இன்றைய கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்றார் அண்ணன் சண்முகநாதன். முதலமைச்சர் அவர்கள் அந்த நூலைக் கொண்டுவர பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் மூலம் ஏற்பாடு செய்தார். அந்த நூல் வெளிவந்து தலைவர் புகழைக் கொண்டாடியது.

தலைவருக்காகப் பணியாற்றியதை என் வாழ்நாள் கடமையாகவே நினைத்திருந்தேன். தலைவருக்காகச் செய்ய வேண்டிய வாழ்நாள் கடமையை அந்த நூல் வழியாகச் செய்திருக்கிறேன் என்பதே என் நிம்மதி.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்** ....பகிர்வார்கள்

## ஜெயரஞ்சன் நூல்கள் வெளியீடு!





எதிரிகள் கூட மறுக்க இயலாத அளவுக்கு, ஆணித்தரமான வாதங்களோடு, திராவிட மாடலால் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை எடுத்துரைப்பதில் தனித்தன்மை வாய்ந்தவர் மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவரும், பொருளாதார அறிஞருமானவர் முனைவர் ஜெயரஞ்சன். அவர் புதிதாக எழுதியுள்ள 'புலம்பெயர் தொழிலாளர்கள்', 'வாகன உற்பத்தியில் தமிழ்நாடு' ஆகிய இரண்டு தமிழ் நூல்களும், அதன் ஆங்கில மொழியாக்கங்கள் இரண்டு நூல்களும் என மொத்தம் 4 நூல்களை கருஞ்சட்டைப் பதிப்பகம் இன்று (22.12.2024) வெளியிடுகிறது.

சென்னை அடையாறில் உள்ள முத்தமிழ்ப் பேரவையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நான்கு நூல்களையும் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகிறார். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார். திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன், திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் செ.மதிவதனி ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுகின்றனர். முனைவர் ஜெயரஞ்சன் ஏற்புரை நல்கவுள்ளார்.

காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.30 வரை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. வாய்ப்புள்ளோர் செல்க! பயன்பெறுக!

## ஃப்ளாஷ்பேக்



### என் கனவு நனவானது!



செல்வமணி

தி.மு.க. இளைஞர் அணி சார்பில், 2009-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்டந்தோறும் பேச்சுப் போட்டி நடைபெற்றது. இதில் கடலூர் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றேன். இதன் பரிசளிப்பு விழா கடலூரில் நடைபெற்றது. இந்தப் பரிசளிப்பு விழாவில், அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு பரிசளித்தார்கள். அந்த மேடையில் கழகத் தலைவர் அவர்கள் முன்னால் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. 20 நிமிடங்கள் பேசினேன். பின்னர் பேசிய நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் என்னை வெகுவாகப் பாராட்டியதோடு 'தம்பி செல்வமணி எதிர்காலத்தில் மிகப்பெரிய பேச்சாளராக வருவார், அவரைக் கழகம் பயன்படுத்திக் கொள்ளும்' என்று கூறினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் என்னுடைய இந்தக் கனவு நனவாகி இருக்கிறது.

**– செல்வமணி, மாணவர் அணித் துணை அமைப்பாளர், கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கழகத்தின் ஜனநாயகம்!

1952-ஆம் ஆண்டு சென்னை, மயிலாப்பூர் கிளைக் கழகத்தில், கழகப் பேச்சாளர்களுக்கு எதிராக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையொட்டி, மயிலாப்பூர் கிளையில் சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழகப் பொதுக்கூட்டமே நடைபெறாமல் இருந்தது. பேரறிஞர் அண்ணாவின் வேண்டுகோள்படி தீர்மானம் திரும்பப் பெறப்பட்ட பிறகே, அங்கு கூட்டங்கள் நடைபெற்றன. கழகம் வளர்ந்து வந்த நிலையில், கீழ் அமைப்பு ஒன்றுக்கு அறிஞர் அண்ணா கொடுத்த மரியாதை, உட்கட்சி ஜனநாயகச் செயல்பாடாக அந்த நிகழ்வு இருந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

697

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131